# கோமரன்கடவல பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 11 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜனவரி 07 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜூலை 03 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய கோமரன்கடவல பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கோமரன்கடவல பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கடைப்பிடிக்கும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொனரப்படவில்லை.

(ஆ) செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் வருவாயை, ஈட்டுவதற்குப் பயன்படுத்திய ரூபா 7,487,441 நிலையான சொத்துக்களுக்குத் தேய்மான நிதியேற்பாடு செய்யப்படாமையால், நிதிசார் கூற்றுக்களில் உள்ள செலவினம் உள்ளவாறான செலவினத்தை நிருபணமாக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடக்கு கிழக்கு மாகாண சேவை மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் (NELSIP) கணக்குகளைச் சபையின் கணக்குகளுடன் ஒருங்கிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்காததால் செயற்திட்டத்தின் காசேட்டு மீதியாகிய ரூபா 5,828,289 கட்டிட ஆகு செலவாகிய ரூபா 4,367,649 கொடுப்பனவு செய்ய வேண்டிய தடுத்து வைத்த பணமாகிய ரூபா 1,722,576 பெறவேண்டிய முற்பணமாகிய ரூபா 1,605,000 என்பன கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

(ஆ) காசேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவிலான வங்கி மீதி ரூபா 647,979 ஆகும். எனினும், அது ரூபா 696,244 ஆகக் கணக்கிலிடப்பட்டதால் வங்கி மீதி ரூபா 48,265 கூடுதலாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு முடிவிலான கையிலுள்ள காசு மீதியாகிய ரூபா 43,367 கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) 2012 மார்ச் 31 வரை பெறப்பட்ட நிலையான வைப்பு வட்டியாகிய ரூபா 1,291,721 மீளாய்வாண்டில் நாட்குறிப்பு ஒன்றின் மூலம் தவறுதலாகக் கணக்கிலிடப்பட்டதால் வருவாய்க் கடன்பட்டோரும் திரண்ட நிதியமும் அதேயளவு தொகையால் நிதிசார் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் பெறவேண்டிய நிலையான வைப்பாகிய ஏறக்குறைய ரூபா 98,200 கணக்கிலிடப்படவில்லை.

(ஊ) மாதாந்த ஒருங்கிணைந்த செலவினப் பொழிப்பின் பிரகாரம், மீளாய்வாண்டினது மீண்டுவரும் செலவினமம் ரூபா 4,636,088 ஆகும். எனினும், அதனை ரூபா 5,031,974 ஆகக் கணக்கிலிட்டதால் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினம் ரூபா 395,886 கூடுதலாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(எ) மாதாந்த ஒருங்கிணைந்த பெறுவனவுப் பொழிப்பின் பிரகாரம், ஆண்டிற்கான மீண்டுவரும் வருவாய் ரூபா 7,492,076 ஆகும். எனினும், அதனை ரூபா 5,165,953 ஆகக் கணக்கிலிட்டமையால் ஆண்டிற்கான மீண்டுவரும் வருவாய் ரூபா 2,326,123 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்கள், கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,437,861 க்கான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிக்கோவையினது 59 ஆம் விதி | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வியாபார நிறுவகங்கள் தொடர்பாகக் கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரது 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் | சபைக்குரிய 4 வாகனங்கள் சம்பந்தமாக 6 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. |

சுற்றறிக்கை

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 132,940 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டெழும் செலவினம் ரூபா 79,374 ஆகும்.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான உள்ளவாறான செலவினத்திலும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட செலவினத்திலும் 2 முதல் 76 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவின. அதற்கமைய, வருடாந்த வரவு, செலவுத் திட்டம் நிதிசார் கட்டுப்பாட்டின் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கபட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| (i) | தீர்வையும் வரியும் | - | 5 | - |
| (ii) | குத்தகை வாடகை | 1,323 | 525 | 1,062 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 72 | 52 | 26 |
| (iv) | பிற வருவாய் | 5,585 | 4,584 | 755 |

**2.3.2 வருவாய் தொடர்பான உப விதிகளைத் தயாரித்தல்**

சபையானது 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதியன்று பேன்னரி, சிகை அலங்காரம், உடல் அலங்காரம் என்பவற்றை முறைப்படுத்துதல் போன்றவற்றிற்கான வருவாய் சம்பந்தமான உப விதிகளை அங்கீகரித்து அதனை உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்திருந்த போதும், இதுவரை அவ் விதிகள் சட்டபூர்வமாகவில்லை. அதன் காரணமாக, குறித்த நிதித் தோற்றுவாய்களின் வாயிலான வருவாயை சபை இழந்திருந்தது.

**2.3.3 கடை வாடகை**

2012 ஆம் ஆண்டின் பொருட்டுப் பெறவேண்டிய கடை வாடகையாகிய ரூபா 25,250 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை 2014 மார்ச் 31 வரை மேற்கொள்ளப்படாதிருந்தது.

**2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம்**

கிழக்கு மாகாண சபைத் தலைமைச் செயலாளரின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாகப் பெறவேண்டிய தொகையை இனங்கண்டு அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) கல்கடவெல வெலமெத வீதியில் கொங்கிரீட் இடுவதற்கான செயற்திட்டம்**

கல்கடவெல வெலமெத வீதியை 1000 மீட்டர் நீளத்திலும் 3 மீட்டர் அகலத்திலும் 6 அங்குலத் தடிப்புடனும் கொங்கீரிட் இடுவதற்கு ஒப்பந்தகாரர் ஒருவருடன் 2012 ஏப்ரல் 4 அன்று ரூபா 8,025,000 க்கான ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) கொங்கிரீட் வீதியை அமைப்பதற்கு முன்னர் குறித்த சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதால் வீதியை முற்றாக அபிவிருத்தி செய்வது எவ்வாறு எனச் சரிவர மதிப்பீடு செய்ய முடியாது போயிற்று.

(ii) பழைய மதகுகள் ஐந்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால், அம்மதகுகள் இருந்த இடத்தில் 135 மீட்டருக்கு கொங்கிரீட் இடப்படவில்லை. 5 பழைய மதகுகளையும் அமைக்காது

வீதிக்கு கொங்கிரீட் இடப்பட்டமையால் நீர்வழிந்தோடுவது தடைப்பட்டது. அதனால் வீதியின் நெடுங்காலம் பாவனை இடருக்குள்ளாகலாம் என 2014 மார்ச் 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) குடிநீர் செயற்திட்டத்தை அமுலாக்குதல்**

மீளாய்வாண்டின் போது பொதுக் குடிநீர் வழங்கும் கிணறுகளை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தின் கீழ் ரூபா 226,464 செலவின கல்கடவெல குடிநீர் பொதுக் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டன.

இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) குடிநீர் கிணறு நீர்மாண வேலை வரைபடங்கள் (Drawing) தயாரிகக்ப்படாததால், கிணற்றின் ஆழம், சுற்றளவு, பக்க நீளம் என்பவற்றை உள்ளடக்கிய கிணற்றின் அமைப்பைக் கணக்காய்வில் சரிவர இனங்கான முடியாது போயிற்று.

(ii) இதனைப் பொதுக் கிணறாகப் பயன்படுத்துவதற்கான விருப்பத்தைப் பெறாது தனியார் காணி ஒன்றில் நிர்மாணித்தால் அது பொதுக் கிணறாகப் பயன்படுத்தப்படுவதற்கு ஒதுக்கப்படவில்லை.

## 2.5 சூழல் பிரச்சினைகள்

இது தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) கோமரன்கடவெல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள மக்களுக்குத் தகுதியான குடிநீர் வசதி இன்மையால் அவர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியிருந்தனர். இதனால் கிட்னி உபாதைகள் அதிகரித்துச் செல்வது கிராம உத்தியோகத்தர்களது அறிக்கைகளால் புலனாகின. 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்குமாறு குடிநீர் வழங்கும் குறுகிய நெடுங்காலத் திட்டங்களைத் தயாரிப்பதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கிட்னி உபாதைகளுக்குள்ளானோரது தகவல்களைச் சேகரிப்பதற்கும் மக்களுக்கு இதனை அறிவுறுத்துவதற்கும் இதனைப் பொறுப்பான நிறுவனங்களுக்கு அறிவிப்பதற்குமான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவயணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடம் |
|---|---|---|---|
| பதவிநிலை | 01 | - | 01 |
| இரண்டாந்தரம் | 15 | 05 | 10 |
| மூன்றாம் நிலை | 16 | 06 | 10 |
| மொத்தம் | 32 | 11 | 21 |

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) பதில் கடமை ஆற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் சபையின் செயலாளரது பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. 15 ஆண்டுகளாகச் செயலாளர் ஒருவரை நியமிப்பதற்குச் சபை நடவடிக்கை மேற்கொள்ளாதிருந்தது.

(ஆ) வெற்றிடத்தில் அடக்கிய 2 நூலகங்களின் பதவிகளும் 5 அபிவிருத்தி உதவியாளர் பதவிகளுக்குமான 3 ஆண்டுகளுக்கு மேலாக நிரப்பப்படாதிருந்தன. அவ்வுத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டம்
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) மனிதவள முகாமைத்துவம்